

**எஸ் ஜயகுமார்**

துணைப் பிரதமர்,

தேசிய பாதுகாப்புக்கான ஒருங்கிணைப்பு அமைச்சர்,

சட்ட அமைச்சர்

தீயன அழிந்து நல்லவை பிறப்பதையும், இருள் மற்றும் அறியாமை மறைந்து ஒளி மற்றும் ஞானம் பிறப்பதையும், வெறுப்பு மறைந்து அன்பு பிறப்பதையும் பிரதிபலிப்பதே தீபாவளி பணிடிகையின் கொண்டாட்டம். நமது அன்புக்குரியவர்களிடம் மீண்டும் மகிழ்ச்சியாக இருந்து உறவுகளை வலுப்படுத்துவதும் இந்தக் கொண்டாட்டக் காலத்தில்தான்.

நம்மை நாமே புரிந்துகொள்வதற்கும் இதுவும் ஒரு சிறந்த நேரம். சமய மற்றும் கலாசார நிகழ்ச்சிகளைக் கொண்டாடும் அதே வேளையில், இந்த விழாக்களின் அர்த்தங்களையும், பெற்றோர்களிடத்தில் அன்பு காட்டுதல், அவர்களை மதித்தல், பரிவு, ஒத்துழைப்பு, தன்னடக்கம், தாராளக் குணம், சகிப்புத் தன்மை போன்ற நமது கோட்பாடுகளைக் கட்டிக்காக்க இவை எந்த அளவுக்கு உதவுகின்றன என்பது பற்றியும் நாம் புரிந்துகொள்வது அவசியமாகும். இவை அனைத்தும் தீபாவளிக் கொண்டாட்டங்களுக்கு இன்றியமையாத பண்புகள்.

சிங்கப்பூரின் சுறுசுறுப்பான வாழ்க்கை முறைக்கும், பரபரப்பான வேலையிடச் சூழ்நிலைக்கும் இடையே இந்துக்கள் உட்பட அனைத்து சிங்கப்பூரர்களும் மேற்கூறப்பட்ட பண்புகளைக் கட்டிக்காப்பது மிகவும் அவசியமாகும்.

அனைத்து இந்துக்களுக்கும் எனது மனமார்ந்த தீபாவளி நல்வாழ்த்துகள்.



**எஸ் ராஜேந்திரன்,**
தலைவர்,
இந்து அறக்கட்டளை வாரியம்

இந்த ஆண்டு, சிங்கப்பூரில் தீபாவளிக் கொண்டாட்டங்கள் தொடங்கி இரண்டு நாட்கள் கழித்து முஸ்லிம்கள் நோன்புப் பெருநாளைக் கொண்டாடவிருக்கின்றனர். அந்த வாரம் கொண்டாட்ட உணர்வையும், தொடர்ந்த வளப்பத்தையும் இன ஒற்றுமையையும் மேம்படுத்தும் வாரமாக அமையும். இந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியையும் வளமான கலாசார கோட்பாடுகளையும் குடும்பத்தினர், நண்பர்கள், அண்டை வீட்டுக்காரர்கள் ஆகியோருடன் இணைந்து கொண்டாடும் காலமாகவும் அது அமையும்.

இந்த ஆண்டு மே மாதத்தில், இந்து அறக்கட்டளை வாரியம் (எச்இபி) ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயிலின் மஹா கும்பாபிஷேகத்தை நடத்தியது. அதை அடுத்து ஆகஸ்ட் மாதத்தில், வாரியம் அதன் இரண்டாவது தமிழ் பாலர் பள்ளியை ஈசூனில் திறந்தது. இப்போது அதன் தொடக்கக் காலம் முதலே வெளியிட்டு வரும் "சிங்கப்பூர் இந்து" சஞ்சிகையைப் புதுப் பொலிவுடன் வெளியிடவிருக்கிறது. தற்போது அதன் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் கோயில்களின் மேம்படுத்தப்பட்ட செயல்பாட்டு முறையையும், வசதிகளையும் மேம்படுத்தும் நோக்கத்தில் இருந்து வரும் வாரியம், சிங்கப்பூர் இந்துக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் மாபெரும் பொறுப்பை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டுள்ளது. சிங்கப்பூர் இந்துக்கள் சமய ஈடுபாட்டிலும், சமூக, கல்வி மற்றும் அறக்காரியங்களில் ஈடுபடவேண்டும் என்பவைதான் அந்தச் சவால்கள். இந்து சமயத்துக்கும், அதன் ஆலயங்களுக்கும் உள்ள மிக முக்கிய தூண்களாக விளங்கும் இந்து சமய நடவடிக்கைகளையும், சடங்குகளையும் கட்டிக்காப்பது இந்து அறக்கட்டளை வாரியத்தின் மிகப் பெரிய சவாலாக விளங்குகிறது. ஒவ்வோர் இந்துவும் நமது சமயத்தை, நமது சமூக மற்றும் சுற்றுச்சூழலுக்கு உட்பட்ட நடைமுறை உண்மைகளைப் பாதிக்காத வண்ணம் கடைப்பிடிப்பதைக் கண்காணிக்கும் முக்கிய பொறுப்பு வாரியத்துக்கு உண்டு.

சமூக, கல்வி மற்றும் அறப்பண்புக்கு உட்பட்டிருக்கும் வலுவான அடித்தளத்தை உருவாக்காமல், நமது ஆலயத்தின் சுவர்களைப் பாதுகாத்து, பராமரித்து, அழகுபடுத்துவது என்பது ஒரு துடிப்பான இந்திய சமூகத்தை உருவாக்குவது சிரமமாகும். புதிய நூற்றாண்டுக்கு ஒரு வலுவான இந்திய சமூகத்தை உருவாக்குவதில் வாரியம் முக்கிய பங்கு வகிக்கும். இதைச் சாதிக்க வேண்டுமாயின், மக்கள் ஆதரவு குறிப்பாக, துடிப்பான இளையர்களும், நிபுணத்துவத் தொழிலாலர்களும் முன்வந்து சமூக, அடித்தளங்கள், சமய நடவடிக்கைகள் ஆகியவற்றில் பங்கேற்கவேண்டும்.

சிங்கப்பூரில் உள்ள இந்துக்கள் அனைவருக்கும், இந்து அறக்கட்டளை வாரியம் மனமார்ந்த தீபாவளி வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.